# பல்கலைக்கழக விளையாட்டு நிகழ்வுகளும் முஸ்லிம் மாணவிகள் பங்கேற்பில் உளவியல் சவால்களும்

**எஸ்.ஐ.ஸிஹானா[1],எம்.ஜே.எப்.ஜெஸ்னா[2]**
[1,2]கலை கலாசாரப் பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
*sissehana@gmail.com, jesnajeswer@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** இவ்வாய்வின் நோக்கமானது இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசாரப் பீடத்தின் முஸ்லிம் மாணவிகள், தமக்கு பல்கலைக்கழகமானது சகல விதமான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்த போதிலும், விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமல் இருப்பதற்குக் காரணமான பல்வேறு உளவியல் சவால்களை அடையாளம் கண்டு அதற்கான பரிந்துரைகள் மற்றும் மாற்று நடவடிக்கைகளை உள்ளடக்கி அதற்கான தீர்வினை முன்வைப்பதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இலங்கையில் உள்ள பதினைந்து பல்கலைக்கழகங்களில் முஸ்லிம் மாணவர்களை பெரும்பான்மையாக கொண்ட ஒரே ஒரு பல்கலைக்கழகமாக இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் திகழ்கிறது. குறிப்பாக முஸ்லிம் மாணவிகள் அதிகளவு உள்வாங்கப்படுகின்ற பல்கலைக்கழகமாகவும் இதுவே காணப்படுகின்றது. அதிலும் கலை கலாச்சார பீடத்திற்கு தெரிவு செய்யப்யப்பட்ட முஸ்லிம் மாணவிகள் தமது கல்வி நடவடிக்கைகளில் மட்டுமன்றி விளையாட்டு நிகழ்வுகளிலும் குறிப்பிடத்தக்களவுக்கு முன்னணியில் திகழ்ந்து வந்துள்ளனர் என்பதை இப்பல்கலைக்கழகத்தின் கடந்த கால விளையாட்டு துறை வருடாந்த அறிக்கைகள் பறைசாற்றி நிற்கின்றன. இருப்பினும் கடந்த ஐந்தாண்டுக்காலப் பிரிவினுள் மேற்சொன்ன விளையாட்டுத்துறை பங்கேற்பானது முற்றாக வீழ்ச்சியடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை பிற்பட்டகால அறிக்கைகள், தொடர்ந்தேர்ச்சையான அவதானிப்புக்கள் மூலம் இனங்கானப்பட்டுள்ள பாரியதொரு குறைப்பாடாகும். இப்பின்னணியே இவ்வாய்வுக்கான முக்கிய உந்துதல் காரணி ஆகும்.இவ்வாய்வுக்கு கலை மற்றும் கலாச்சாரப் பீடத்தின் மூன்றாம் வருடத்தில் தமது கற்கை நெறியை தொடந்து கொண்டிருக்கும், விளையாட்டில் ஆர்வமுள்ள இருபது முஸ்லிம் மாணவிகள் எடுத்துக் கொள்ளப்பட்டனர். இதில் நோக்குடை மாதிரியை பயன்படுத்தி வினாக்கொத்து, நேர்கானல், குழு கலந்துரையாடல் மூலமும் தகவல்கள் பெற்பட்டன. ஆய்வின் பெறுபேறுகளாக சுயவிருத்தியின்மை, நனவிலி ஒடுக்கல், பாதுகாப்பின்மை உணர்வு, எதிர்மறை சமூக அறிகை எனும் உளவியல் சவால்களை அவர்கள் எதிர்கொள்வதாக அடையாளம் காணப்பட்டன. அவ்வாறான காரணங்களினால் விளையாடச் செல்லாது இருப்பதனால், உடற் பருமன், உயர் குருதியழுத்தம், துணிச்சலின்மை, நம்பிக்கையின்மை எனும் விளைவுகள் ஏற்பட்டிருப்பது ஆய்வின் போது கண்டறியப்பட்டது. இத்தகைய பிரச்சனைகளுக்கு பரிந்துரைகளாக சமூகமயமாக்கல், அறிகை மூலமும் நடத்தை மூலமும் ஊக்குவிப்புடன் கூடிய சூழலை ஏற்படுத்தி கொடுத்து, ீளலஉாழ நுனரஉயவஹைெ மூலம் மாணவர்கள் மத்தியில் விளையாடுவதற்கு ஆர்வத்தை ஏற்படுத்த பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

**திறவுச் சொற்கள்:** முஸ்லிம் மாணவிகள், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், கலை கலாச்சார பீடம்,விளையாட்டுத்துறை, பங்கேற்பு.


## அறிமுகம்

பல்வகைமை கலாசார சூழலை கொண்டமைந்த இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆனது கலை மற்றும் கலாச்சாரம்,இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி,முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம்,பொறியியல் மற்றும் பிரயோக விஞ்ஞானம் எனும் ஐந்து பீடங்களை உள்ளடக்கியுள்ளது. முஸ்லிம் மாணவிகளை பெரும்பான்மை விகிதமாகக் கொண்டமைந்த பல்கலைக்கழகத்திலே குறிப்பாக கலை மற்றும் கலாசார பீடத்தின் அண்ணளவாக ஒட்டுமொத்த மாணவர்கள் 925 பேரில் 608 பேர் முஸ்லிம் மாணவிகளாக உள்ளனர்.

பீடங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள்,பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள், வருடாந்த விளையாட்டு விழா என ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழக விளையாட்டுத் துறையினரால் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இவ்வாறான விளையாட்டு நிகழ்வுகள் மூலம் மாணவர்களிடையே ஒற்றுமை,குழு ரீதியான பங்குபற்றுதல்,தலைமைத்துவ ஆற்றல, மாணவர்களிடையேயான நிகழ்வு ஒருங்கினைப்பு,சகோதரத்துவம்,ஆளுமைவிருத்தி என்பன அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறான நிகழ்வுகளில் மாணவர் பங்கேற்பு அவசியமானதாகும்.

ஆயினும் இவ்விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்கின்ற மாணவர்களில் அதிகமானோர் பௌத்த மற்றும் இந்து மாணவிகளாகவே காணப்படுகின்றனர். முஸ்லிம் ஆண் மாணவர்கள் இதில் பங்குபற்றினாலும் பெரும்பான்மையாக இருக்கின்ற முஸ்லிம் மாணவிகள் பங்குபற்றுதல் கடந்த சில ஆண்டுகளாக முற்றிலும் இல்லை என்பதும் அதில் கலை மற்றும் கலாச்சார பீடம் விதிவிலக்கானதல்ல என்பதும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விளையாட்டுத்துறையின் மாணவர் பங்கேற்பு தொடர்பான அறிக்கை மிகத்தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது.

*அட்டவணை1 2015 Sports Report*




அத்தோடு தமது பாடசாலை காலங்களில் நன்கு திறமையாக விளையாடி தேசிய மட்டம் வரைக்கும் சென்ற முஸ்லிம் மாணவிகள் இங்கு பல்கலைக்கழகத்தில் மாத்திரம் விளையாடுவதில்லை. மேலும் இஸ்லாமிய மார்க்கம் சகல விதத்திலும் பெண்களின் விளையாட்டை அனுமதித்து இருக்கும் போது அதனை பயன்படுத்த பின்நிற்க கூடாது.

அவ்வாறு மார்க்கத்தில் அனுமதித்த விளையாட்டை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவிகள் கலந்து கொள்ளாமல் அதனை விட்டு ஒதுங்கி செல்வதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு அதற்கு பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வு விவரணப் பகுப்பாய்வின் கீழ் பண்பு ரீதியான ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் ஆய்வை மேலும் செம்மைப்படுத்த அளவை ரீதியான தரவுகளும் பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. இது நிகழ்தகவற்ற மாதிரியில் நோக்கத்தை மையமாகக் கொண்ட மாதிரியின் மூலம் செய்யப்பட்டது. குறுகிய காலத்தை கொண்டு ஆய்வு செய்ததால் இதில் விளையாட்டில் ஆர்வமுள்ள 20 கலைப்பீட முஸ்லிம் மாணவிகள் மட்டுமே மாதிரியாகப் பயன்படுத்தப்பட்டனர்.

ஆய்வுக்கான தரவு சேகரிப்பானது வினாக்கொத்து முறை மூலம் 08 முஸ்லிம் மாணவிகளிடம் இருந்தும் குழுக் கலந்துரையாடல் மூலம் 08 முஸ்லிம் மாணவிகளிடம் இருந்தும் நேர்காணல் முறை மூலம் 04 முஸ்லிம் மாணவிகளிடம் இருந்தும் தகவல்கள் பெறப்பட்டன. இதில் பல நேர், மறைப் பெறுமான பதில்களை எதிர்பார்த்து அனைத்து கேள்விகளுமே திறந்த வினா அமைப்பிலேயே கேட்கப்பட்டன.

உ-ம்:

i. பாடசாலை காலங்களில் விளையாட்டு நிகழ்வுகளில் உமது ஈடுபாடு எவ்வாறு இருந்தது?
ii. பாடசாலை விளையாட்டில் ஈடுபடும்போதும் அதன் பின்னரும் கிடைத்த அனுபவங்கள்?
iii. பல்கலைக்கழக விளையாட்டு நிகழ்வுகளில் உமது ஈடுபாடு எவ்வாறு உள்ளது?
iv. சமய, கலாசார ரீதியில் விளையாட்டு நிகழ்வுகளை நீர் எவ்வாறு பார்க்கிறீர்?
v. பல்கலைக்கழகத்தில் உம்மால் விளையாட்டு நிகழ்வுகளில் பங்கு கொள்ள முடியாமைக்கான காரணம் யாது?
vi. பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவி என்ற ரீதியில் விளையாட்டுத்துறையில் நீர் எவ்வாறான வசதிவாய்ப்புக்களை எதிர்பார்க்கிறீர்?


**அளவையியல் அணுகுமுறை**

*அட்டவணை2 2015 Sports Report*

| இனம் | சதவீதம் |
|---|---|
| சிங்களம் | 70% |
| தமிழ் | 28% |
| முஸ்லிம் | 02% |

*அட்டவணை3 2015 Sports Report*

| Que.Method | Number | Positive(A) | Negative(B) |
|---|---|---|---|
| Quetionare | 08 | 01 | 07 |
| FGD | 08 | - | 08 |
| Intewie | 04 | 01 | 03 |
| | 20 | 02 | 18 |




*வரைபடம்1.*

**ஆய்வுப்பெறுபேறுகளும் கலந்துரையாடலும்.**

இவ்வாய்வானது ஆழமான பகுப்பாய்வு முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு, கலைபீட முஸ்லிம் மாணவிகள் விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமல் இருப்பதற்கு காரணமான உளவியல் சவால்களாக பின்வருவன அடையாளப்படுத்தப்பட்டன.

A. சுயவிருத்தி இன்மை.
B. நனவிலி ஒடுக்கல்.

C. பாதுகாப்பின்மை உணர்வு.
D. எதிர்மறை சமூக அறிகை.

A. <u>சுய விருத்தி இன்மை</u>

அனைவருக்கும் தனது திறமைகள் பற்றி அறியவும் அவற்றை பரீட்சித்துப் பார்த்து, செயற்பாடுகளில் ஈடுபடவும் அவர்களுக்கு உந்துவிசையாக ஏதாவதொன்று காணப்பட வேண்டும். பல்கலைக்கழக விளையாட்டு நிகழ்வைப் பொருத்த வரைக்கும் தனது சுயத்திறமையை விருத்தி செய்து கொள்ள போதிய ஊக்கமளிப்பு அளிக்கப்படல் கட்டாயமாகும். அவ்வாறு ஊக்கமளிக்கும் போது நல்ல பல வினைத்திறனான செயல்களை எதிர்ப்பார்க்கலாம். இதனை பல வழிகளிலும் மேற்கொள்ளலாம். எனினும் எமக்கு எந்த வகையிலுமே ஊக்குவிப்பு வழங்கப்படவில்லை என ஆய்வுக்கு எடுத்த கலைபீட முஸ்லிம் மாணவிகள் தெரிவித்தனர்.

அத்துடன் தமக்கு விளையாட்டு ஊக்குவிப்பாக எந்த விளையாட்டுக்களுக்கும் பெண் பயிற்றுவிப்பாளர்கள் இல்லை. ஏற்கனவே பட்மின்டன் விளையாட்டுக்கு மட்டும் இருந்த பெண் பயிற்றுவிப்பாளர் இடமாற்றம் செய்யப்பட்டு போனதும் இன்னமும் அவ்விடம் வெற்றிடமாகவே காணப்படுகின்றது. அவ்வாறு பெண் பயிற்றுவிப்பாளர்கள் இன்மையால் தைரியமாக விளையாடச்செல்ல முடியவில்லை என்றனர்.

மேலும் பெண் நடுவர்கள் இல்லை. விளையாடும்போது இடையில் ஆண் நடுவர்கள் இருப்பதனால் சுதந்திரமாக விளையாட முடியாது. ஆண்களின் முன் தனது உடல் அசைவுகளைக் காட்டி ஓடியாடி விளையாட விருப்பம் இல்லை என்கின்றனர்.அவ்வாறே தமக்கு விளையாட ஏற்ற இஸ்லாமிய மார்க்கம் அனுமதித்த ஆடை உண்டு என நாம் பல்கலைக்கழகம் நுழைந்ததும் கூறினர் ஆனால் இன்னமும் கண்ணுக்கு காட்டவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

அதுபோலவே முன்னர் விளையாட்டில் இருந்த ஆர்வம் தற்போது *தூக்*கத்தின்பால் உள்ளது என்றனர். ஆரம்பத்தில் விளையாடுவதற்கு எமக்கிருந்த ஆர்வமே பெரியதொரு ஊக்குவிப்பாய் இருந்தது. அப்போது மாலை 4.30 மணி வரை விரிவுரையின் பின் பட்மின்டன் விளையாடிவிட்டு வந்தால் நன்கு உற்சாகமாக இரவில் படிக்கக் கூடியதாய் இருக்கும். தற்போது விளையாடச் செல்லாததால் மாலை நேர விரிவுரையின் பின் விடுதி வந்து களைப்பினால் நித்திரை செல்கின்றது. அதனால் எடை அதிகமாகி உடற்கட்டழகை பேணமுடியாது உள்ளதாக கவலை கொள்கின்றனர்.

எனினும் இங்கு முஸ்லிம் மாணவிகள் விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டதனாலும் கொள்ளுவதனாலும் மற்றவர்கள் அதாவது சுற்றியுள்ளோரும் சமூக வலைத்தளங்களும் விளையாடச்செல்லும் முஸ்லிம் மாணவிகளை இழிவாக எண்ணுவதும் சித்தரிப்பதும் அம்மாணவிகளின் சுய எண்ணக்கருவில் பாதிப்பைச் செலுத்தி அதனால் அவர்களால் விளையாடச்செல்ல முடியாதுள்ளது. இவ்வாறு சுய எண்ணக்கரு பாதிப்படைந்து சுய விருத்தியில் அடைவின்மை காரணமாக விளையாட்டு நிகழ்வுகளில் கலைபீட முஸ்லிம் மாணவிகளின் பங்களிப்பினை காணமுடியவில்லை.

B. <u>ஒடுக்கல்</u>

தென்கிழக்குப் பல்ககலைக்கழகத்தில் ஆரம்ப காலங்களில் உள்ளக, வெளியக விளையாட்டுக்களில் திறமையாக விளையாடி, பீடங்களுக்கு இடையில் கலைப்பீடம் முதலிடம் பெறுமளவுக்கு அபாரமான திறமையுடன் விளையாடிய முஸ்லிம் மாணவிகள் தற்போது உள்ளக அரங்கு விளையாட்டுக்குக் கூட செல்ல முனைவதில்லை. வெளியக விளையாட்டுக்களுக்கு செல்லாமல் இருப்பது சற்று ஏற்றுக் கொள்ளலாம். அம்மைதானம் மறைமுகமாகவன்றி பொதுவாக ஆண்கள் நடமாட்டமான இடத்தில் உள்ளது. ஆனால் உள்ளக விளையாட்டு தகுந்த பாதுகாப்புடன் இருந்தும் முஸ்லிம் மாணவிகள் விளையாட செல்லாமல் இருப்பது நியாயம் இல்லை. இவ்வாறு இவர்கள் செல்லாமல் இருக்க முக்கியமாக கீழ்வரும் மூன்று வகையினர் உளவியல் ரீதியில் அவர்களை தாக்குவது தெரியவந்தது.

- மார்க்க இயக்கங்களை பிழையாகபயன்படுத்தி ஆதாரமாகக் காட்டும் சிலர்.
- மாவட்டவாரி அமைப்பினர்.
- சகநண்பர்களும் சிரேஷ்ட மாணவர்களும்.

C. <u>பாதுகாப்பின்மை உணர்வு</u>

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானமானது பல்கலைக்கழகத்துக்குள் பாதையோரத்தில் பொதுவான ஓர் இடத்தில் ஆண்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடத்தில் அமைந்துள்ளது. அவ்வாறு பொதுவான இடத்தில் தாம் விளையாடும்போது தமது உடலசைவுகளை ஆண்கள் பார்த்து விடுவதை முஸ்லிம் மாணவிகள் விரும்புவதில்லை. அவ்வாறு விளையாடுவது மணதுக்கு ஒருமாதிரி இருப்பதாகவும் பாதுகாப்பில்லாதவாறு இருப்பதாகவும் ஆய்வின்போது முஸ்லிம் மாணவிகள் தெரிவித்தனர்.

அவ்வாறு முஸ்லிம் மாணவிகள் விளையாடுவதைப் பாரப்பதும் பார்த்து விட்டு முஸ்லிம் மாணவிகளை பற்றி தவறாகவும் சில சமூக வலைத்தளங்களில் சித்தரிக்கின்றனர். அண்மைக் காலங்களாக சமூக வலைத்தளங்களதும் ஊடகங்களதும் அராஜகத்துக்கு அளவே இல்லாமல் போய்விட்டது. அவர் அவர்கள் பிரசித்தி பெற வேண்டும் என்பதற்காக முஸ்லிம் மாணவிகளை கொண்டு அவர்களின் நடத்தையினை மிகவும் மோசமாக சித்தரிக்கின்றனர். இதனால் விளையாடச் செல்ல முஸ்லிம் மாணவிகள் பயப்படுகின்றனர். அவ்வாறு சமூக வலைத்தளங்களில் அவர்களது பெயர் போட்டோக்கள் வருவதை அம்மாணவிகள் விரும்பாமை மட்டுமல்லாது அவர்களது பெற்றோர்களும் அம்மாணவிகளின் எதிர்காலத்தை எண்ணி அவர்களது விளையாட்டுக்கு செல்ல வேண்டாம் என தடை செய்கின்றனர். கடந்த காலங்களில் சமூக

வலைத்தளங்களின் தவறான செயலானது முஸ்லிம் மாணவிகளது திருமண முறிவுகளுக்கும் பேசிய திருமணங்கள் உடையவும் காரணமாயிற்று.இப்படி சமூக வலைதளங்களது செயலினால் அவர்களது எதிர்காலத்தின் மீதான அச்சத்தினையும் பாதுகாப்பற்ற தன்மையையும் ஏற்படுத்தி விடும். அதனால்தான் முஸ்லிம் மாணவிகளை மைதானங்களில் காணமுடியாதுள்ளது.

அத்தோடு கூட இருக்கும் நண்பிகள், சிரேஷ்ட மாணவர்கள்,மாவட்ட அமைப்புவாதிகள்,மார்க்க இயக்கங்கள்என அனைவரும் விளையாடும் முஸ்லிம் மாணவிகளை தவறாக பார்ப்பதால் அவர்களால் தாம் பாதிக்கப்படுவதை எண்ணி தமக்கு பாதுகாப்பின்மையை உணர்ந்து விளையாடச் செல்வதில் இருந்த பின் வாங்கி விடுகின்றனர்.

D. <u>எதிர்மறை சமூக அறிகை</u>

யாரோ எப்போதோ எங்கோ தவறு செய்தார்கள் என்பதற்காக தென்கிழக்கு பல்கலைக்கழக விடுதி மாணவிகளை தவறான கண்ணோட்டத்தில் பார்க்கும் நிலை இன்று வரைக்கும் நீடிக்கவே செய்கின்றது. குறிப்பிட்ட எந்தவித காரணமும் இன்றி தவறெதுவும் செய்யாமலும் இன்றைய பெண் சமுதாயம் வெளியில் தைரியமாக நடமாட முடியாமல் இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு சமூகத்தை சூழக்கொண்டே தென்கிழக்கு பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. அத்தோடு தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஓர் பல்கலாச்சாரம் கொண்டதாக அண்மையில் மாற்றப்பட்டதும் அவர்களது தவறான சிந்தனைக்கு காரணமாக இருக்கலாம்.

மேலும் பலவகையிலும் காரணமே இன்றி எமது பல்கலைக்கழக மாணவிகள் சமூக வலைத்தளங்களில் தவறாக சித்தரிக்கப்படுகின்றனர். இது ஓர் பிழையான செயலாகும். மற்றும் சுற்றியுள்ள நண்பர் வட்டம் தம்மை விளையாடச் செல்வதால் வேறு விதத்தில் பார்ப்பதனாலும் முஸ்லிம் மாணவிகளின் விளையாட செல்லும் ஆசை அப்படியே புதையுண்டு போய்விடுகின்றது.ஒருவரது ஆளுமை விருத்தியில் திறமையில் சூழற் காரணிகளுக்கு முக்கிய இடமுண்டு. ஒருவரின் நடத்தையானது சூழற் காரணிகளால் நிர்ணயிக்கப்படும். ஒருவர் ஒரு காட்சியை அல்லது ஒரு அனுபவத்தை பற்றி எவ்வாறு சிந்திக்கிறார் எவ்வாறு உணர்கிறார் என்ற அடிப்படையிலேயே அவரது நடத்தையும் அமைகின்றது. இங்கு முஸ்லிம் மாணவிகளுக்கு ஏற்ற உவப்பான அனுபவம் கிடைப்பதில்லை என்பது உண்மையாகும். அத்தோடு இம் முஸ்லிம் மாணவிகள் உறுதித் தன்மை இழந்து காணப்படுகின்றனர்.

இவ்வாய்வில் முஸ்லிம் மாணவிகளின் விளையாட்டு பங்களிப்பின்மைக்கு காரணமான உளவியல் காரணிகளாக அடையாளம் கண்டவைகளாக சுயவிருத்தி இன்மை, நனவிலி ஒடுக்கல், பாதுகாப்பின்மை உணர்வு, எதிர்மறை சமூக அறிகை என்பன காணப்படுகின்றன. அவற்றை நிவர்த்தி செய்ய இப்பரிந்துரைகளை இரண்டு அனுகுமுறைகளின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

01. Behavioral Modification Therapy
02. Cognitive Behavior Therapy

01. Behavioral Modification Therapy

கலைப்பீட முஸ்லிம் மாணவிகளின் உளவியல் தடைகளை நிவர்த்தி செய்ய ஊக்குவிப்புடன் கூடிய வாய்புகளைக் கொண்ட சூழலை அமைத்துக் கொடுப்பதன் மூலம் அவர்களது உளவியல் தடைகள் நீங்க வழி செய்யலாம். இது நேர்மீள்வலியுருத்தலை அடிப்படையாகக் கொண்டது.

- Motivational Envirenment
- Positive Reinforcement

விளையாடுவதற்கு ஏற்றச் சூழலை அமைத்து ஊக்குவிப்புக்குத் தேவையான தூண்டலை ஏற்படுத்துவதன் மூலம் விளையாடும் துலங்களை ஏற்படுத்த முடியும்.

- பெண் நடுவர்கள்.
- பெண் பயிற்றுவிப்பாளர்கள்.
- இஸ்லாமிய முறைப்படியான பிரத்தியேக ஆடை.
- பெண்களுக்கு தனியான மைதான அமைப்பு.
- விருப்பத்துக்குரிய பாடவேளையாக நேரசூசியில் இணைத்தல்.
- இன்னும் சில புதிய விளையாட்டுக்களை சேர்த்தல்.
- அதிகளவு விளையாட்டுப் போட்டிகளை அடிக்கடி ஏற்பாடு செய்தல்.
- விளையாட்டில் தோல்வி அடைந்தோறுக்கும் சான்றிதழ்களை வழங்கல்.
- SUD வழங்கல்.

02. Cognitive Behavior Therapy

முஸ்லிம் மாணவிகளது அனைத்து உளவியல் பிரச்சினைகளினையும் தீர்க்க சிறந்த அனுகுமுறைCognitive Behavior Therapyஆகும். இதில்Psycho Education நுட்பம்பயன்படுத்தப்படும். முஸ்லிம் மாணவிகள் மத்தியில் தம்மைப் பற்றிய தனது கருத்தினையும் தன்னைப் பற்றிய மற்றவர்களது கருத்தினையும் மற்றவர்கள் பற்றிய தனது கருத்தினையும் நேர்மமான முறையில் புலக்காட்சி காண வைத்து அதன் மூலம்.

- சுய எண்ணக்கரு விருத்தி. (Self Concept)
- ஆளுமை விருத்தி. (Personallity)
- சுய விழிப்புணர்வு. (Self Awareness)
- பிழையான புலக்காட்சியை அகற்றல். (Perception)

என்பனவற்றை வெளிப்படுத்த முடியும். மேலும் விளையாட்டு பற்றிய கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல், துண்டுப்பிரசுரம் வழங்கல், சுவரொட்டிகள் மூலமும் விளையாட்டின் மீதான ஆர்வத்தினை ஏற்படுத்த முடியும். அத்துடன் இவ்வாறு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதும் நண்பிகள், சிரேஷ்ட மாணவர்கள், மாவட்ட அமைப்புவாதிகள், மார்க்க இயக்கங்கள் ஆகியோரை தைரியமாக வெற்றிக்கொள்வர். அதன் மூலம் சிறந்த பெண் சமுதாயத்தினை நிச்சயம் உருவாக்க முடியும்.

**முடிவுரை**

மேற்சொன்ன தரவுகளின் அடிப்படையில் நோக்கும் போது எமது இவ்வாய்வின் கருதுகோளானது நியாயப்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். எனவே முஸ்லிம் மாணவிகள் எதிரநோக்கும் உளவியல் பிரச்சினைகளே அவர்கள் விளையாட்டில் இருந்து பெரிதும் தூரமாகுவதற்கு ஏதுவான காரணிகளாக உள்ளன. எனவே விளையாட்டில் ஆர்வமுள்ள இலங்கைத் தென்கிழக்கப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளுக்கு மேற்சொன்ன உளவியல் ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் பல்கலைக்கழக விளையாட்டுச் சூழலில் ஆரோக்கியமான பெண்களின் பங்கேற்புகளை அவதானிக்கலாம் என்பது புலனாகின்றது.

**உசாத்துணைகள்**


- ரிட்லி ஜயசிங்க, உளவியல் சார் உளவளத்துணை அனுகுமுறை, இவ்தி டரஸட, இலங்கை.
- விமலா கிருஸ்ணபிள்ளைஇ 2012 வழிகாட்டலும் ஆலோசனையும்இ சேமமடு பதிப்பகம்- இலங்கை.
- http://dept.clcillinois.edu/psy/IntroductionToPsychologyText.pdf,accesson:2016.5.16
- https://www.ivcc.edu/uploadedFiles/_faculty/_dockins/PSY_chapter__1.pdf, access on:2016.05.16
- https://www.verywell.com/what-is-positive-reinforcement-2795412,access on: 2016 .05.16
- http://www.simplypsychology.org/operant-conditioning.html, access on: 2016.05.16